ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பாமாவின் புதினங்களில் தலித்திய வாழ்வியல் சிந்தனைகள்

**செ.முத்துச்செல்வி**

**முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,பதிவு எண் : 23112014022006**

**ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர்கல்லூரி, தமிழாய்வு மையம், தூத்துக்குடி – 628002.**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி – 12.**

**முனைவர் உ . விஜி**

**நெறியாளர் , உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**

**ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தமிழாய்வு மையம், தூத்துக்குடி – 628 002.**

**49**

**ஆய்வுச்சுருக்கம்**

மனித உணர்வுகளையும், அனுபவங்களையும் சித்தரித்துக் காட்டுவதில் தற்காலப் படைப்புகள்முன் நிற்கின்றன. கால வெள்ளத்திற்கு ஏற்பச் சமுதாயக் கருத்துக்களை தெளிவாகச் சித்தரிப்பதில் புதினம் தனியிடம் பெற்றுத் திகழ்கின்றது. பாமா தலித் இனத்தனவர் அதனால்தான் பெற்றச்சுய அனுபவத்தையும் சமூகத்திலுள்ள மேடுபள்ளங்களையும், அவலங்களையும் தலித்திய பிரச்சனைகளையும் படைப்புகள் வழி படைத்தவர். தன் வாழ்வில் ஏற்பட்ட தலித்திய அனுபவங்களைப் புதினமாக வடிவமைத்தவர். தலித் மக்களின் வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளைப் படைத்துக் காட்டும் புதினங்கள், அவர்களின் துன்பங்களுக்காகவும் அன்றாடத் தேவைக்காக துணிவுடன் எதிர்த்து நின்று அதற்கான தீர்வுகளை அடையும் நோக்கமாக இக்கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

நம் சமூக அமைப்பானது சாதி, வர்க்க வேறுபாடுகளைத் தமக்குரிய நிலைக்களமாகக் கொண்டுள்ளது. இவற்றுள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாட்டின் அடிப்படையில் தீண்டத்தகாதவர் மிகவும் தாழ்த்தப்பட்டவர்களைத் தலித்துக்கள் என்றும் அழைக்கின்றனர் தலித்தினால் படைக்கப்பட்டது தலித்திலக்கியம் என்றாகிவிடமுடியாது. நசுக்கப்படுதலை அதன் பரிமாணத்தை அனுபவமாகும் எழுத்துக்களையே தலித் இலக்கியமாக இனம் காணவேண்டும். தலித் இலக்கியச்சிந்தனைகளின் மூலம் அவற்றிற்கு தீர்வுகள் பற்றி ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**தலித்தியம் - விளக்கம்**

தலித்தியம் என்பது ஒரு சாதியல்ல. அது ஒரு இயக்கம் உரிமை தேவை சலுகை தேவை இல்லை என்பதே இதன் குரல். சாதி அடிப்படையிலான சடங்கு, தீண்டாமை இவற்றை உடைத்தெறிவதே இதனது நோக்கம். தலித் இலக்கியத்தின் அடிப்படையில் பல அறிஞர்கள் கருத்துக்களை கூறியுள்ளனர்.

தலித்திய சிந்தனை

தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி, வேலைவாய்ப்பபு, அரசியல்

போன்றவற்றில் அம்மக்களை முன்னேற்றுவதற்காகவும், தலித்திய அமைப்புகள் செயல்படுகின்றன. தலித் மக்களின் உரிமைகளைப் பெறுவதும் ஒற்றுமையுடன் இணைந்து செயல்படுவதே தலித்தியம் என்பதை "தீண்டத்தகாதவர்களாகப் புறக்கணிக்கப்பட்ட மக்களை சமூகஅளவில் முன்னேற்றத் தோன்றிய இயக்கமாகத் தலித்தியக்கம் செயல்படுகிறது."

அடிமனதில் ஏற்பட்ட அடிமைநிலையைப் பிடுங்கி எறிவது குறிப்பாக மீறுவதையும் தேருவதையும் பிரதானமாகக் கொண்டதே தலித்தியம் அபிமணி சமூகநீதி பெறுவதே தலித்தியத்தின் நோக்கமாகும்.

"தலித்தியம் என்பது தீண்டத்தகாதவர்கள் என்று ஒடுக்கப்பட்ட மக்களை சமூக அளவில் முன்னேற்றுவதாகும் என்பர் இரா.பிரேமா. தலித்தியச் சிந்தனைகளும், தலித் விடுதலை உணர்வையும் ஏற்படுத்துவதில் தலித் இலக்கியங்களும் தலித்துக்களின் இயக்கங்களுக்கு இணையான பங்களிப்பைச் செய்கின்றன."

தலித்தியச் சித்தனைகளை முன்னெடுக்கும் இயக்கங்கள் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் தாங்கள் இழந்த உரிமைகளைப் பெற முடியும்.

**தலித் இலக்கியம்** :

தமிழ்ச்சூழலில் தலித் இலக்கியமானது இக்காலத்தில் புதியவகை இடத்தைப் பெறுகிறது. இப்புதிய வகை இலக்கியத்தில் தலித் இலக்கியமும் ஒன்றாகும் என்பதை.

"தலித்துகளால் தலித்துகளுக்காக எழுதப்படும்
இலக்கியம் தலித் இலக்கியம்
தலித்தல்லாதவர்கள் தலித்துகளுக்காக எழுதும்
இலக்கியம் தலித் ஆதரவு இலக்கியம் ஆகும்"

என்று தலித்தியல் என்னும் நூலில் 'தலித்' இலக்கிய அரசியல் என்னும் பகுதியில் குருநாதன் அவர்கள் கூறியுள்ளார். தலித் இலக்கியம் என்பதுகளில் காணப்பட்டாலும் தொண்ணூறுகளில் தான் இலக்கியம் பரவத்தொடங்கியது. 1991ஆம் ஆண்டு தலித் பண்பாட்டுப் பேரவை என்னும் தனியான அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அப்பேரவையின் போது அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருந்த தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த எழுத்தாளர்கள் ஒன்று திரண்டு புதிய எழுச்சியின் காரணமாகத் தலித் இலக்கியம் என்பது தாழ்த்தப்பட்டவர்களின் பயன்பாட்டைப் பிரதிபலிக்க இலக்கியமாகும்.

**தலித்திய சிக்கல்கள் :**

உலக உயிர்களிடையே உயர்வாகக் கருதப்படுபவர்கள் மனிதர்களாவர். அத்தகைய மனிதர்களிடையே காணப்படும் சாதியப்பிரிவினைகளால் மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும் பழக்கம் நடைமுறையில் உள்ளது.

**கல்வி – தலித்திய சிந்தனை**

கல்வியை கற்பதால் தலித் மக்களுக்கு இழைக்கப்படும் சாதிய பகுப்பு கொடுமைகளுக்க தீர்வு காணமுடியும் தலித் என்றில்லாமல் அனைத்து கீழ்சாதி மக்களும் கல்வியறிவு பெறுவது

அவசியமாகிறது.

தலித்துகள் உயர்சாதிக்காரர்களுக்கு அடிமையாகவே வாழ வேண்டும். இவர்கள் படித்து முன்னேறி நாகரிகமடைதல் கூடாது. உயர்பதவிகள் வகித்தலை யாரும் மனநிறைவோடு கற்றுகு; கொள்ளவில்லை. இவ்வனுபவ வெளிப்பாடுகளைப் பாமாவின் படைப்புகள் அனைத்திலும் காண முடிக்கின்றது.

இதற்குச் சான்றாகப் பாமாவின் வன்மத்தில் இடம்பெறும் ஒரு நிகழ்வைக் காணலாம். தலித் இளைஞர்கள் படித்து முன்னேறி வருகின்றனர். குனிந்த முதுகையும் தாழ்ந்த தலையையும் நிமிர்த்தி, உயர்த்தி வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடைய ஒவ்வொரு பேச்சிலும் இவ்வெண்ணம் வெளிப்படுகின்றது. இதனை உயர்ச்சாதிக்காரர்களால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை.

> "பறப்பெயலுகளா .... எம்புட்டுத் திமிராப் பேசுராம்னு பாருங்க இப்படிதான் நெனவுக்கு வருது. அந்தா கட்டம் போட்ட சட்டப்போட்டுப் போறானே. அவுகப்பந்தான் நம்ம கோபால்சாமி வீட்ல பண்ணவேல பாத்தானே முடியப்பன் இவங்ககூட எத்தனையோ தடவ அவுகப்பங்கூட வந்து கையேந்தி வாங்கித்தின்ன பெயதான். இன்னைக்கு என்னமோ நாலெழுத்து படுச்சுட்டோம்னு இம்புட்டுச் சவுடாலாப் போறாம்" (வன்.ப 26)

தலித்துக்களின் முன்னேற்றம் பிறருக்குப் பொறாமையூட்டுவதைத்தான் இக்கூற்று புலப்படுத்துகின்றது.

செ.கணேசலிங்கம் நீண்டபயணம் என்றும் தன் புதினத்தில்

> "பள்ளர், பறையர் பிள்ளைகளை பள்ளிகூடத்துக்கு ஒழுங்காய் அனுப்பி படிக்கச்செய்ய வேண்டும்"

என்று கூறியுள்ளார். தலித் மக்கள் தமக்குக் கிடைத்த பதவியைக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களை உயர்வான நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்பட வேண்டும் என்று உரைக்கிறார். சங்கதி புதினத்தில் பெண் கல்வியின் அவசியம் குறித்து பாமா கூறியுள்ளார்.

> "அப்படியெல்லாம் இப்ப நிப்பாட்ட உடமாட்டாக பெரிய பத்து வரைக்கும் மாச்சும் படிக்க வைக்கனும்னு சொல்றாக. நம்மதான் படிக்காம கெடந்து சீரழிறோம். அதுகளாவது படிக்கட்டும்ங்காக"

என்ற பாத்திமா கதைபாத்திரத்தின் மூலம் அறியமுடிகிறது கல்வி கற்பதால் மட்டுமே சாதியப்பாகுப்பாட்டை கலைய முடியும் என்பதை உணரமுடிகிறது.

**தலித் முன்னேற்றம்**

அகம், புறம் எனப் பேசப்பட்ட தமிழ் இலக்கியம் இன்று கோட்பாட்டளவில் ஆழ வேரூன்றி விருட்சமாகப் பரந்து, விரிந்து விளிம்புநிலை மக்களின் சிக்களைத் தலையாயதாக வெளிப்படுத்தும் நிலைக்கு வந்துள்ளது. கனவையும், கற்பனையையும் மட்டும் சொல்வது இலக்கியமாகாது. கலை வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டுமெனில் வாழ்வின் சிக்கல்களை மனித பேதமின்றி வெளிப்படுத்த

வேண்டும். புதிதாகத் தோன்றிய இலக்கியக் கொள்கைகளும் இயக்கங்களும் இதற்கு உதவின.

சாதி இலலாத சமத்துவம் வேண்டி பாரதிக்கு முன்னர் சித்தர்கள் முதல் பலர் பாடியுள்ளனர். இருப்பினும் வீரியத்துடன் வெளிப்படுத்தியவர் பாரதியாரே ஆவார். இவருடைய படைப்புகள் முழுவதையும் ஆராய்ந்த திறனாய்வாளர்கள் இவரை தலித் இலக்கிய முன்னோடி என்று கூறுகின்றனர்.

"நடைமுறை வாழ்வில் தலித்துகளின் மேம்பாட்டுக்காகப் பாரதி பணியாற்றியதையும் அதனால் பார்ப்பனச் சாதியினர் அவனையும் அவர் குடும்பத்தையும் தீண்டாதவர்களாக விலக்கி வைத்தது. கனக லி;ங்கம் என்னும் தாழ்த்தப்பட்டோர்க்குப் பூணூல் போட்டார் சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் என்னும் பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கையைத் தன் வாழ்நாள் முழுவதிலும் கடைப்பிடித்தார். தமிழகத்தில் பொதுவுடைமைச் சிற்பியான வேலரின் மடியில்தான் அவர் உயிர் பிரிந்தது"

என வரும் தி.க.சி.யின் கருத்தால் பாரதியின் சிந்தனைப் போக்கை அறியலாம். இவர் தமிழ் இலக்கிய நடையை மாற்றியதோடு மட்டுமல்லாமல் அதன் பொருண்மையையும் மாற்றியுள்ளார். அதன் பயனால் அஞ்சி, ஒதுங்கி வாழ்ந்த மக்கள் இன்று ஓரளவு தலை நிமிர்ந்து வாழும் நிலை உருவாகியுள்ளது. இந்நிலை முற்றிலும் மாறப் பல ஆண்டுகள் ஆகும். இதற்கான விழிப்புணர்வை தற்கால இலக்கியங்கள் உருவாக்குகின்றன.

தம் இலக்கியப் படைப்பின் மூலமாக தலித் மக்களின் பிரச்சனைகளை எடுத்துரைக்கிறார் பிரச்சனைகளுக்கு தீர்வையும் ஆங்காங்கே எடுத்துரைக்கிறார்.

"தலித் இலக்கியம் என்பது வெறும் இலக்கியம் அல்ல. அரசியல், போராட்டம் இலக்கியம் என்ற முப்பரிமாணக் கலவை"

ஆகும். மதபோதகர்களே தலித் மக்களின் பாகுபாட்டுடன் செயல்படும்பொழுது சமுதாயம் மேம்படாது. தலித் செயல்படும் பொழு சமுதாயம் மேம்படாது. தலித் மக்களின் வளர்ச்சிக்கு நீதித்துறை, சமுதாயம், காவல்துறை ஆகியவை துணை நிற்க வேண்டும் என்று பாமா தன் புதினங்களில் குறிப்பிட்டுளார்.

சமுதாயத்தில் முன்னேற்றம்

சமுதாயத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கு தீர்வு சமூகத்தில் தான் உள்ளது. தலித் மக்கள் என்ற பாகுபாட்டை களைந்து அவர்கள் முன்னேற்றம் அடைவதில் சமுதாயமே பெரும் பங்கு வகிக்கிறது.

பாமாவின் ஒரு தாத்தாவும் எருமையும் என்ற சிறுகதையில் சமூக தீர்வு என்பதை,

"ரெண்டுபேரும் வந்த பெறகு ஹெட்மாஸ்டரு ரொம்ப சாதாரணமா கேட்டாரு. தெருக்குழாயில் தண்ணி குடிச்சா என்ன தப்பு? சேரி ஆளுகளோட வீட்ல தாங் குடிக்கக்கூடாது... ஒங்க வீட்ல அந்தத் தெருக் கொழாயிலயே குடீக்கக் கூடாதுன்னுட்டாங்களா... சரி சரி கிளாசுக்குப் போங்க"

என்று தலைமையாசிரியர் கூறியவற்றுள் அவங்க வீட்லதா என்ற சொல் மிகச் சாதாரணமாகக்

கூறப்பட்டாலும் இச்சொற்கள் வகுப்பு ஆசிரியரின் மனதைப் பெரிதும் பாதித்தன. இச்சொற்கதை தலைமையாசிரியரே கூறியது ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியது.

தலைமை ஆசிரியரின் இத்தீர்ப்பு வகுப்பு ஆசிரியரை மட்டுமல்லாது இக்கதையைப் படிக்கும் மனிதநேயம் மிக்க அனைவரையும் வேதனை அடையச் செய்யும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நாட்டின் நாளையத் தூண்களை உருவாக்கும் வல்லமை வாய்ந்த பொறுப்பை வகிக்கும் ஆசிரியர்களின் சிந்தனையும் சொல்லும். எப்பொழுதும் சமுதாயத்திற்குப் பயன்தரதக்கதாக வெளிப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் வகிக்கும் பதவி கௌரவமிழந்துவிடும். சமுதாயச் சீரழிவு மெல்லக் கொல்லும் விஷமாக மாணவர்களிடையே வளர்ந்து வரும். இத்தகையோர் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

> "தர்மபுரி மாவட்டத்தில் கிட்லிங், மலைதாங்கி என்கின்ற மலைவாழ் மக்கள் வாழும் கிராமங்கள் அரசு அதிகாரிகள் கால்படாத இடமாக இருந்தது. இம்மாவட்ட மகளிர்திட்ட அலுவலர்கள் நேரிடையாக இக்கிராமத்தையும் இப்பழங்குடி இன மக்களையும் சந்தித்து அவர்களுடைய தேவை, பிரச்சனைகள் ஆகியவற்றை ஆய்வு செய்து உடனடியாக இரண்டு சுயஉதவிக்குழுக்கள் தொடங்கியது பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது."

இத்தகைய முயற்சிகளினால் மலையின் கடைக்கோடியில் வாழும் மனித சமுதூயத்திற்கே முன்னேற்ற விளக்கு ஏற்றப்பட்டுள்ளது.

நகரத்துடன் ஒப்பிடுகையில் கிராமங்களில் மருத்துவ வசதி மிகவும் குறைவு கிராமங்களில் தலி;த் மக்களுகு;கு இலவச மருத்துவ வசதி தரப்பட வேண்டும். ஆரோக்கியம் மேம்படுவது தலித் மக்களின் பல சிக்கல்களை தீர்க்கும் தீர்வாகும்.

ஆரசியலில் முன்னேற்றம்

அரசியல் மூலம் மக்களுக்குத் தொண்டு செய்ய முடியும். அதனால் ஒடுக்கப்பட்ட தலித் மக்களை ஒடுக்க நிலையிலிருந்து விடுவித்து மீட்டெடுக்க அரசியல் தீர்வாக அமைகிறது.

> "அம்புட்டுச் சாதிக்காரனும் இன்னைக்கு மூக்கு மேல வெரல வச்சு நம்மள அருவசமாப் பாக்கரானுக. பிருஞ்சு கெடந்த நம்ம ஒன்னாச் சேந்து, செயிச்சுக்காட்டிட்டோம். இனிமேல்பட்டு நம்ம ரெண்டு சாதிகளும் சண்ட சச்சரவு போடாமெ, வாழனும். இந்த பஞ்சாயத்துத் தேர்தல்ல செயிச்சது போதாது. சட்டசபை, நாடாளுமன்றம் எல்லா இடத்துலயும் நம்ம தலித்துக குரல் ஒங்கி ஒலிக்கனும்"

தலித் மக்கள் அரசியலில் போட்டியிட்டு வென்ற சாதிப்பாகுபாடில்லாத நிலையினைக் குறிப்பிடுகிறார். தன் இனமக்களின் உயர்வுக்கு பாடுபவர். இதன் மூலம் தலித்திய சிக்கல்களக்குத் தீர்வு அமையும் என்று எண்ண முடிகிறது.

**முடிவுரை** :

தலித்துகள், ஒடுக்கப்பட்டோர் ஆகியோரின் முன்னேற்றம்தான் நாட்டின் முன்னேற்றத்தை

முழுமை அடையச் செய்ய முடியும். இதனை உணர்ந்து அவர்களுடைய பிரச்சனையை மூலாதாரமாகக் கொண்டு அவற்றை ஆராய்ந்து அறிந்து தீர்வுகளை கூறியும், தீர்வுகளுக்கான வழிமுறைகளையும் தம் புதினம் வழியாகக் கூறினார்.

கல்வி, அரசியல், சமுதாயம் போன்றவற்றின் மூலம் தலித் மக்களுக்கான தீர்வு அமையும் என்பதை ஆசிரியரின் படைப்புகள் வழியாக உணர முடிகிறது.

அடிக்குறிப்பு :

1. அபிமணி. தலித் பண்பாடு – ப.62
2. இரா.பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள். ப – 256.
3. இராம.குருநாதன், தலித்தியம், ப – 35.
4. தலித்தியம், டாக்டர்.சு.சண்முகசுந்தரம் தொ.ஆ, ப – 3.
5. ஒரு தாத்தாவும் எருமையும் (சிறுகதை) ப – 191.
6. முற்றம் மே. 2002, ப – 10.

துணைநூற்பட்டியல்

இரா.பிரேமா

பெண்ணியம்

பாரி நிலையம்

சென்னை

தலித்தியம்

டாக்டர்.சு.சண்முகசுந்தரம்( தொ.ஆ)

நற்றினை பதிப்பகம்